உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களைத் தெரிவித்ததற்குப் பிறகு, இறுதியாக எனது கருத்தைத் தெரிவிக்க நான் விரும்பு கிறேன். ஆகையால் உறுப்பினர்கள் தங்களது கருத்தைச் சொல்ல, பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதிக்கக் கோருகிறேன்.

**திரு. மு. கருணாநிதி:** தலைவரவர்களே, இந்த விவாதம் தொடங்குவதற்கு முன் ஒரு சில ஐயப்பாடுகளுக்கு நான் விளக்கம் பெற விரும்புகிறேன். ஏனென்றால் இந்த ஐயப்பாடு ஒரு வகையிலே ஒழுங்குப் பிரச்னையாகக் கூட ஆகிறது. இன்னொரு வகையிலே அவை திசை திருப்பப்பட்டது என்ற உரிமை பிரச்னைக்குக் கூட இடம் தருகிறது. என்றாலும் நான் அதை ஒழுங்குப் பிரச்னையாக, உரிமை மீறல் பிரச்னையாகக் கொண்டு வாராமல் ஒரு விளக்கம் கிடைக்க வேண்டுமென்ற வகையில், அவை முன்னவர் அவைக்கு மாத்திரமல்ல, இந்த அவையின் மூலம் நாட்டுக்கும், வியாபாரிகளுக்கும், பொதுமக்களுக்கும் ஒரு விளக்கம் கொடுக்க வேண்டும் என்பதற்காகத் தங்கள் மூலமாக அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், இந்த மன்றத்தில் வைத்த வரவு-செலவு திட்டத்தில்—தமிழ் 36 ஆம் பக்கத்தில்—ஆண்டுக்கு ஒரு லட்சத்துக்கு குறைவாக விற்பனை உடைய சிறு வணிகர் களுக்கு ஒட்டுமொத்தக் கணிப்பு முறை கொண்டு வரப்படும் என்று மிகத் தெளிவாகக் குறிப்பிட்டார். ஆங்கிலத்தில் 31 ஆம் பக்கத்தில்

'A summary assessment procedure will be introduced for small dealers whose turnover is less than Rs. 1 lakh ... '

என்று ஆங்கில பட்ஜெட் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது புதிதாக ஒன்றை அறிவிப்பது போல நிதிநிலை அறிக்கையில் இடம் பெற்று, அதை அறிவிக்கின்ற நேரத்திலே இந்த அவையில் உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கரவொலி மூல மாக மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்குத் தரப்பட்டிருக்கின்ற இந்த சட்டமுன்வடிவினை நோக்குகின்ற நேரத்தில், இதிலே புதிதாக என்ன கொண்டு வரப் பட்டிருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. அந்த சந்தேகத் தின் காரணமாகத்தான், 4—8—77 சட்டப்பேரவையின் நிகழ்ச்சி யின் போது மாண்புமிகு உறுப்பினர் சாதிக் பாட்சா அவர்கள் ஒரு கேள்வியை எழுப்பினார். நிதிநிலை அறிக்கையில் ஆண்டுக்கு

1977 ஆகஸ்ட் 29] [திரு. மு. கருணாநிதி]

ஒரு லட்சத்திற்குக் குறைவாக விற்பனை உடைய சிறுவணிகர்களுக்கு ஒட்டுமொத்தக் கணிப்பு முறை கொண்டுவரப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. வணிகர்களுக்கு இருக்கிற சந்தேகம், இப்போது 50,000 ரூபாய்வரை டர்னோவர் இருந்தால் விற்பனை வரி விலக்கு இருக்கிறது. அதாவது கழக அரசு காலத்தில் அளிக்கப்பட்ட வரி விலக்கு.

(முற்பகல் 11-00)

இப்போது 50 ஆயிரம் ரூபாயை 1 லட்சத்திற்கு உயர்த்தப் போகிறீர்களா அல்லது கம்பவுண்டிங் சிஸ்டப்படி "டர்ன் ஓவர்" எவ்வளவு இருந்தாலும் வரி போடுகிற முறையைக் கொண்டு வரப் போகிறீர்களா? கம்பவுண்டிங் முறையில் வியாபாரிகளுக்கு மிகத் தொல்லைகள் ஏற்படக்கூடும். ஆகவே தான் 50 ஆயிரம் ரூபாய் வரையில் வரியில்லை என்று இருப்பதை ஒரு லட்சம் வரைக்கும் வரியில்லை என்று உயர்த்தப்போகிறீர்களா? என்று கேட்டார். அப்போது நிதியமைச்சர் அவர்கள் அளித்த பதிலில் இதே வாசகத்தைக் குறிப்பிட்டிருக்கிறார். அதாவது, மன்னிக்க வேண்டும் 50 "ஆயிரம் ரூபாய் தான். ஒரு லட்சமல்ல. ஆகவே உங்களுக்கு அந்தச் சந்தேகம் வர வேண்டிய அவசியம் இல்லை" என்று 4—8—77 அன்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்தக் கருத்தினை வெளியிட்டிருக்கிறார். மறுநாள் அவர் இல்லை. அவைக்கு நிதியமைச்சரவர்கள் வரவில்லை. பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் அதற்கான விளக்கத்தை மீண்டும் இந்த அவையிலே தந்தார். பொதுப்பணித்துறை அமைச்சரவர்கள் தந்த விளக்கத்திலே சொன்ன வாசகம், "மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் ஒரு பிரச்னையை எழுப்பினார்கள். 50 ஆயிரம் ரூபாய் வரையில் டர்ன் ஓவர் உள்ள வியாபாரிகளுக்கு இன்றைக்கே விலக்கு இருக்கிறது. அது அப்படியே தொடருகிறது. 50 ஆயிரம் ரூபாய்க்கு மேல் ஒரு லட்சம் வரையில் டர்ன் ஓவர் உள்ள வியாபாரிகளுக்கு வரி விதிக்கப்படுகிறது. அவர்களுக்கு ஒட்டு மொத்தக் கணக்கின்படி கம்பவுண்டிங் கொண்டு வருகிறோம்", என்று பொதுப்பணித்துறை அமைச்சர் இங்கே குறிப்பிட்டார். நான் அப்போது ஒரு விளக்கத்தைக் கோரினேன். நான் கேட்ட விளக்கம் "இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ஒரு லட்சத்திற்கும் குறைவாக உள்ள வணிகர்களுக்கு இந்த முறை கொண்டு வரப்படுகிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1 லட்சத்திற்குக் குறைவாக விற்பனை செய்கிறவர்கள் என்றால் 10 ஆயிரம் ரூபாய்க்கு

விற்பனை செய்கிற வணிகர்களும் அதில் அடங்குவார்கள். நிதி நிலை அறிக்கை குறிப்பிடுவதற்கும், நிதியமைச்சர் அவர்கள் பதிலுக்கும் உள்ள முரண்பாட்டினை நான் 'சுட்டிக் காட்டுகிறேன்'' என்று சொன்னேன்.

அப்போது பொதுப்பணித் துறை அமைச்சர் விளக்கம் அளிக்கின்ற முறையிலே ஒரு பதில் அளித்தார். அவர் அளித்த பதில் "ரூபாய் 50 ஆயிரத்திற்கு வரவு-செலவு செய்கிற வியாபாரிகளுக்கு எற்கெனவே விலக்கு அளிக்கப்பட்டு இருக்கிறது. அது எற்கெனவே அமுலில் இருந்து வருகிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் ஆளுங்கட்சி வரிசையில் இருக்கின்றபோது அவரால் அளிக்கப்பட்ட வரி விலக்கு இது என்பது அவருக்கே நன்றாகத் தெரியும்" என்றார்கள். "அது இப்போதும் தொடருகிறது. இந்த அரசும் அதனையே அவர்களுக்கு அளித்து வருகிறது. புதிதாக ஒன்றுமில்லை" என்றார்கள். ஆனால் 50 ஆயிரத்திலிருந்து 1 லட்சம் வரையில் வியாபாரம் செய்கின்ற வணிகர்களுக்கு கம்பவுண்டிங் சிஸ்டம் என்று சொல்லப்படுகிறது" என்றார்.

ஆகவே, 50 ஆயிரம் ரூபாய் வரையில் வரவு-செலவு செய்கின்ற வணிகர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த சலுகை, விலக்கு தொடருகிறது என்று சொல்லப்பட்டது, அவர் குறிப்பிட்டுக் காட்டியதற்கு மகிழ்ச்சி. இது புதிதாகச் செய்யப்படவில்லை. எற்கெனவே இருந்து வருவதுதான் தொடருகிறது. அது மேலும் நீட்டிக்கப்படுகிறது என்பதை வலியுறுத்துகிற வகையிலேதான் பொதுப் பணித்துறை அமைச்சர் அளித்த விளக்கத்திலே, இந்த அரசு புதிதாக அளித்திருக்கிற சலுகை 50 ஆயிரத்திலே இருந்து ஒரு லட்சம் வரையில் வரவு-செலவு செய்கின்ற வணிகர்களுக்கு கம்பவுண்டிங் சிஸ்டம் கொண்டு வரப்படுகிறது என்று குறிப்பிட்டார்.

ஆனால் இங்கே வைக்கப்பட்டிருக்கிற இந்த தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்திற்கான 77-ம் ஆண்டு விற்பனை வரித் திருத்த மசோதாவின் இணைப்பைப் பார்த்தால் அதிலே குறிப்பிட்டுள்ள பிரிவுகளில் இப்படிச் சொல்வதற்கு இடமில்லை. இணக்கம் செய்யப்பட்டு கம்பவுண்டிங் சிஸ்டத்தில் வரி என்று சொல்லவில்லை.

1977 ஆகஸ்ட் 29] [திரு. மு. கருணாநிதி]

இப்போது 3-வது பிரிவைச் சேர்ந்த உப பிரிவில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், ஒரு வணிகரோ அல்லது மொத்த வியாபாரியோ ரூபாய் 50 ஆயிரத்துக்குக் குறையாமல் ஆனால் 1 லட்சத்திற்கு மேற்படாமல் வாணிபம் செய்தால் அவர் கீழ்க்கண்ட வகையிலே வரி செலுத்தலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கழக அரசு இருந்த போதும் இது இருந்திருக்கிறது. அது ஏதோ புதியதான சலுகை என்று சொல்லப்படுகிறது. அவர்களுக்கு இணக்கம் செய்யப்பட்ட முறையிலே வரி என்று சொல்லவில்லை.

7-வது பிரிவில் (எ)(1) உட்பிரிவில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால் ஒரு தற்காலிக வணிகர் அல்லது வியாபார இடத்தில் தங்கி இராத வணிகர் ஒருவரது முகவர் நீங்கலாக என்ற சொற்கள் புதிதாகச் சேர்க்கப்பட வேண்டும் என்று சொல்லப்படுகிறது.

ஒரு வணிகர் அல்லது வியாபார இடத்தில் தங்கி இராத வணிகர் ஒருவரது முகவர் நீங்கலாக, வணிகர்கள் ரூ. 50 ஆயிரத்திற்குக் குறையாமல், ஒரு லட்சத்திற்கு மேற்படாமல் வாணிபம் செய்தால், அந்த வணிகர் இந்த உப பிரிவின் கீழ் வரி செலுத்துவது என்றால் கீழ்க்கண்ட வகைகளிலே வரி செலுத்தலாம் என்று இருக்கிறது.

எனவே, இதி புதிதாக அறிவிக்கப்பட்ட சலுகை அல்ல. ஆனால் நிதிநிலை அறிக்கையில் புதிதாக அறிவிக்கப்பட்ட சலுகை என்பது போல் வாசகம் அமைக்கப்பட்டு இந்த அவை திசைதிருப்பப்படுகிறது என்பதை நான் குறைபாடாகச் சொல்கிறேன், குற்றச்சாட்டாகக் கூட சொல்ல விரும்பவில்லை. புதிய அரசின் மீது அவ்வளவு அவசரத்தில் குற்றச்சாட்டு கூற விரும்பவில்லை, ஆகவே குறைபாடாகச் சொல்கிறேன். அதை வலியுறுத்துகிற வகையில் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் ரூ. 50,000 வரை ஏற்கனவே இருந்த எக்ஸம்ஷன் உண்டு, ரூ. 50,000-க்கு மேல் லட்சம் வரை கம்பவுண்டிங், இது இப்போது அரசு அளிக்கிற புது சலுகை என்று கூறினார்கள். அல்ல, நிச்சயமாக அல்ல. அது ஏற்கனவே இருக்கிற சலுகைதான். எனவே புதிதாக 'தற்காலிக வணிகர் அல்லது வியாபார இடத்தில் தங்கி இராத வணிகரது—முகவர் நீங்கலாக' என்று இந்த ப்ராக்கட்டிற்குள்ளே இருக்கிற வாசகத்தைத் தவிர அதிலுள்ள ஜீவ ஓட்டத்தில், மைய இழையில்

எந்தவிதமான மாறுதலும் செய்யப்படவில்லை. அப்படி மாறுதல் செய்யப்படாத ஒன்றை மாறுதல் செய்திருப்பதுபோல் புதிதாக ரூ. 50,000 லிருந்து ரூ. 1,00,000 வரை கம்பவுண்டிங் ஸிஸ்டம் கொண்டுவரப்பட்டிருப்பதைப்போல் நிதிநிலை அறிக்கையில் அறிவித்து அவை திசைதிருப்பப்பட்டிருக்கிறது. பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் மேலும் வலியுறுத்தி இது ஒரு புதிய சலுகை என்று கூறுவதும் அவையைத் திசை திருப்பக்கூடிய ஒரு காரியமாகும் என்று எடுத்துச்சொல்லி இதற்கு நிதி அமைச்சர் அவர்கள் இப்போதில்லாவிட்டாலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கலந்து பேசி இன்றைய இந்த விவாதத்தின் முடிவுரையின் போது பதிலளிப்பார்கள் என்று நம்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : ஒரு திருத்தம் திரு. ஜேம்ஸ் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். திரு. ஜேம்ஸ்.

THIRU J. JAMES: Sir, I move—

'That the Tamil Nadu General Sales Tax (Amendment) Bill, 1977 (L.A. Bill No. 7 of 1977) be referred to a Select Committee.'

திருத்தம் முறையே வழிமொழியப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை விதி 77 (1)-ன் கீழ முதலில் கொடுக்கப்பட்ட திருத்தத்தை மட்டும் முன்மொழிவார்கள். மற்ற திருத்தங்கள் தள்ளப்படுகின்றன.

**திரு. ஜே. ஜேம்ஸ்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன் வைக்கப்பட்டிருக்கிற விற்பனை வரி சட்ட (திருத்த) மசோதா ஒரு எக்ஸாஸ்டிவ் பில் போல் அமைந்திருக்கிறது. வெறும் ஒன்றிரண்டு திருத்தங்கள் மட்டுமல்ல. பெரிய மாறுதல்களைக் கொண்டதொரு மசோதாவாக இருப்பது மட்டுமல்லாமல் இன்னும் அதிகமாக பொதுமக்களைப் பாதிக்கிற முறையில், குறிப்பாக வெல்லத்தின் மீதும், மஞ்சள் மீதும் போடப்பட்டிருக்கிற வரியானது ஏழை எளியவர்களை அதிகமாகப் பாதிக்கக் கூடியதாக இருக்கிறது. எனவே இந்த மசோதா மக்களால் ஏற்றுக் கொள்ளக் கூடிய மசோதா அல்ல என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். மக்களால் ஏற்றுக் கொள்ளத் தகாத ஒரு மசோதாவை இந்த அவை முன் வைத்து விவாதிக்கிறபோது பல்வேறு சங்கடங்கள் ஏற்படுகின்றன என்

என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் தமிழிலே சிறு வணிகர்களுக்கு ஒட்டு மொத்தக் கணிப்பு முறை கொண்டு வரப்படும் என்று இருக்கிறது. இந்த ஒட்டுமொத்த கணிப்பு முறை என்ன என்பது பற்றி விளக்கம் எடுத்துக்கொண்டவர்கள், என்ன விளக்கத்தைப் பெற்றுக் கொண்டார்கள் என்றால்—நான் கருது கிறேன்—கம்பௌண்டிங் என்று எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதுதான் உண்மையாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஆனால் என்னிடம் இங்கே இருக்கிற கிளாசரியைப் பார்க்கிற போது, கம்பௌண்டிங் டாக்ஸ் என்பதற்கு அவர்கள் தந்திருக்கின்ற விளக்கம் 'கம்பௌண்டிங் ஃபீ', "இணைப்புக் கட்டணம்", "ஒட்டு மொத்த கட்டணம்", "இணைப்புக் கட்டணம்" என்பது. இவைகளுக்கு இடையே ஏற்பட்ட இடர்பாடு காரணமாக, இப்படிப்பட்ட சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றனவே தவிர, இந்தத் திருத்தத்தில் புதிதாக கொண்டு வந்திருப்பது "நான்-ரெசிடென்ஷியல் டிரேடர்" அல்லது "காஷுவல் டிரேடர்" இவர்கள் இரண்டு பேருக்கும், இதுவரை அளிக்கப்பட்டு வந்த சலுகை இதன் மூலம் நீக்கப்பட்டிருக்கிறது என்பதுதான்—இது தான் புதிய திருத்தம் என்பதை நான் பணிவன்போடு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி: அதைத்தான் தாங்கள் வரவு செலவு திட்டத்தில் அறிவிக்கவில்லை என்பது என்னுடைய முறையீடு. —குற்றச்சாட்டு என்று நான் சொல்ல விரும்பவில்லை—முறையீடு. அதை அறிவிக்காமல், என்ன அறிவித்தீர்கள் என்றால், லட்ச ரூபாய்க்கு குறைவாக வியாபாரம் செய்கிற சிறு வியாபாரிகளுக்கு 'கம்பௌண்டிங்' என்று சொன்னீர்கள். அது மாத்திரமல்ல. ஆங்கிலத்தில் நிதிநிலை அறிக்கையில் உள்ள விஷயத்தைப் படித்துக் காட்டினீர்கள்.

"A summary assessment procedure will be introduced for small dealers whose turnover is less than rupees one lakh"

என்று படித்துக் காட்டினீர்கள். ஆனால் அதுவே இங்கே தரப்பட்டிருக்கின்ற

'Annexure to Tamil Nadu General Sales Tax (Amendment) Bill 1977'

அதில் அப்படி போடவில்லை. Payment of taxes at compounded rate என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனவே தான் நான் இந்த

முறையீட்டைச் சொல்லி, நீங்கள் விளக்கிட வேண்டுமென்று மீண்டும் கேட்டுக் கொள்கிறேன். நிதிநிலை அறிக்கையில் தெளிவாகச் சொல்லப்படவில்லை. தவருக நடந்துவிட்டது என்று சொல்வதில் தவறில்லை. தவறுகளை ஒத்துக்கொள்வதில் ஏதும் தவறில்லை. பத்திரிக்கைகாரர்களும் போடமாட்டார்கள். நிதியமைச்சர் தவறுக்காக வருந்தினர்கள் என்று போடமாட்டார்கள். ஏனென்றால் பத்திரிகைக்காரர்கள் உங்களுக்குச் சாதகமாக இருக்கின்ற நிலையில், நீங்கள் அதற்காக நாணப்படாமல், தவறை ஒத்துக்கொள்வதில் தவறில்லை.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தவறை ஒத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக—நான் செய்யாத தவறை ஒத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக எதிர்கட்சித் தலைவர் இவ்வளவு தூரத்திற்குப் போய் பேசுவார் என்று நான் எதிர்பார்க்கவில்லை. என்னைக் காப்பாற்ற பத்திரிக்கைக்காரர்களை துணைக்கு அழைக்கிருர். சபையையும் துணைக்கு அழைக்கிருர். நான் இன்னமும் சொல்கிறேன்—நிதிநிலை அறிக்கையில் ஏற்பட்டது மொழி பெயர்ப்பு குழப்பமே தவிர தவறில்லை. நிச்சயமாகச் சொல்கிறேன், சிறு வணிகர்கள் "காஷுவல் டிரேடர்களை" இதிலிருந்து விடுவிக்கவும், அதே நேரத்தில் வெளி மாநிலங்களிலிருந்து வருகின்ற "நான்-ரெசிடென்ஷியல் டிரேடர்" இதுவரை பெற்றிருந்த அந்த வாய்ப்பை அகற்றுவதற்கும்தான் இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறதே தவிர, அவர்கள் கருதுகின்றபடி நிலைமைகள் இல்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12.40)

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, ஆண்டொன்றுக்கு ஒரு லட்சத்திற்குக் குறைவாக விற்பனை உடைய சிறு வியாபாரிகளுக்கு ஒட்டு மொத்த கணிப்புக் கொண்டு வரப்படும் என்று இருக்கிறது. அதிலே என்ன மொழி பெயர்ப்புத் தவறு. இதை நாங்கள் சொல்வதற்குக் காரணம் இது நம்முடைய நிதிநிலை அறிக்கைக்கு உண்மையிலே மாருன அறிவிப்பு. என்னுடைய வாதமெல்லாம் இது உண்மைக்கு மாருன அறிவிப்பு. ஏற்கெனவே அந்த முறை இருக்கிறது. ஒரு லட்சத்திற்குக் குறைவாக உள்ள வணிகர்களுக்கு, 50 ஆயிரம் ரூபாய்க்கு மேல் வருகிறவர்களுக்கு

1977 ஆகஸ்ட் 29] [திரு. மு. கருணாநிதி]

கம்பவுண்டிங் முறை இருக்கிறது. இப்போது கம்பவுண்டிங் செய்யப் போகிறீர்களா, எதைச் செய்யப் போகிறீர்கள்? மொழி பெயர்ப்பிலே தவறு என்று சொல்வது சரியல்ல. உண்மைக்கு மாறான தகவல் தரப்படுகிறது என்பது தான் என்னுடைய வாதம்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: உண்மைக்கு மாறான தகவல் தரப்படவில்லை, இன்னும் என்னாலே அதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. தயவு செய்து நீங்கள் ஏதோ ஒரு பிரச்னையைக் கிளறிக் கொண்டிருக்கிறோம் என்று கருதிக் கொண்டு இருக்கிறீர்கள். அப்படி ஒன்றும் இல்லை. இதிலே இருக்கிற மைய உணர்வு என்று கருதுவது இப்போது கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தின் மூலம் 50 ஆயிரத்திற்கு மேல் வியாபாரம் செய்கின்றவர்களுக்கு முன்பு "எக்சம்ஷன்" கொடுக்கப்பட்டு வந்தது. நானும் பேசும்போது சொன்னேன். நம்முடைய ராமச்சந்திரன் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள் இங்கே. இப்போது கொண்டு வரப்படும் தீர்மானத்தை இங்கே வந்து "காஷுவலாக" வியாபாரம் செய்கிறவர்கள் வரி கொடுக்காமல் ஏய்ப்பதைத் தடுப்பதற்காக கொண்டு வரப்படுகிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. மு. கருணாநிதி: நான் அறிந்த வரையில் அந்த நிதி நிலை அறிக்கையில் எந்த வகையிலும் தவறாக மொழி பெயர்க்கப் படவில்லை.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: இன்றைக்குக் கொண்டு வந்த திருத்தம் நான் சொல்கிறேன், ஏற்கெனவே இருந்த மசோதாவிற்கும், இப்போது கொண்டு வந்திருக்கிற திருத்தத்திற்கும் இடையில் நாம் சேர்த்திருப்பது "நான் ரெசிடென்ஷியல் டீலர்" "காஷுவல் டீலர்" இவர்கள் இங்கே வருவார்கள் வியாபாரம் செய்வார்கள், தப்பித்துக் கொண்டு போவார்கள். அவர்கள் இப்படித் தப்பித்துக் கொள்வதற்கு அதிலே இடம் இருக்கின்றது. ஆனால் நியாயமாக நடந்து கொள்கிற நமது வியாபாரிகள் அதிகமாக வரி கொடுக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன. எனவே, அவர்கள் அதிலே இருந்து

ஒன்றும் துண்டு விழாது. சரிக்கட்டிப் போய்விடும். அதிகாரிகளை கணக்கு கேட்டால் தெரியும். ஏக்கருக்கு 10 ரூபாய் என்று சொல்கிறபோது அதனால் இந்த அரசாங்கத்திற்கு அப்படி யொன்றும் பெரிய தொகை வந்துவிடாது. ஆகவே, இந்த மசோதாவைக் கைவிட வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொண்டு, முடிக்கிறேன்.

திரு. மு. கருணாநிதி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர், நம்முடைய நிதி அமைச்சர் அவர்களால் வைக்கப்பட்டுள்ள இந்த மசோதாவை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஆதரிப்பதற்கு இல்லையென்பதை எடுத்துக் கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், 1976-77 ஆம் ஆண்டில் வைக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் குடியரசுத் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் அன்றைய மத்திய நிதி அமைச்சராக இருந்த திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் டெல்லி நாடாளும் மன்றத்தில் அறிவித்த புதிய வரிகளுக்கு இன்று ஏதோ சலுகை என்ற விதத்தில் மீண்டும் விவசாயிகளை பயமுறுத்துகின்ற அளவிற்கு தலைதூக்கியிருக்கிறது என்றுதான் கூறவேண்டும்.

(பிற்பகல் 1-50)

நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே வைத்த நிதிநிலை அறிக்கையிலே அதனை மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். 1976-77 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் "முதல் இரண்டாம் வகைப் பாசன ஆதாரங்களில் பாசனக் கட்டணங்கள் அதிகப்படுத்தப்படுவதையும், வணிகப் பயிர்கள் மீது தனித் தீர்வை விதிக்கப்படுவதையும் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவார்கள்" என்று குறிப்பிட்டுவிட்டு, "30-6-1977 அன்று முடிவுற்ற பசலி ஆண்டில் இந்த வரி வசூல் தள்ளிவைக்கப்பட்டது" என்பதையும் சுட்டிக்காட்டி "தள்ளிவைக்கப்பட்ட கட்டணங்கள் இனி வசூல் செய்யப்பட மாட்டாது என இப்போது தீர்மானித்துள்ளோம்" என்ற மகிழ்ச்சிகரமான செதியையும் அறிக்கையைப் படிக்கின்ற நேரத்தில் அறிவித்தார்கள்.

இந்த மூன்று வகை வாசகங்களையும் பார்க்கிற நேரத்தில் மூன்று நிலைகள் உருவாகின்றன. ஒன்று 1976-77 ஆம் ஆண்டில் குடியரசுத் தலைவர் ஆட்சியில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட

அரசு இல்லாத காரணத்தால், அவர்களுக்காக வாதாடக்கூடிய ஒரு மாநிலச் சட்டமன்றம் இல்லாத காரணத்தால் இந்த வரிவிதிப்பு அன்றைய தினம் அறிமுகப்படுத்தப்பட்டது என்ற நிலை. இரண்டாவது, இதனை விவசாயப் பெருங்குடி மக்கள் தாங்கிக்கொள்ளத் தயாராக இல்லை என்பது அறிவிக்கப்பட்ட போது நண்பர் ஜேம்ஸ் அவர்கள் இங்கே எடுத்துக்காட்டியது போல் நல்லவேளையாக நாடாளுமன்றத் தேர்தல் குறுக்கிட்ட காரணத்தால் அது தள்ளிவைக்கப்பட்டது. அந்த வரிகளைத் தள்ளிவைக்கின்ற நிலையில், தள்ளிவைக்கப்பட்டது. இனிமேல் வசூலிக்கப்படமாட்டாது என்ற மகிழ்ச்சிகரமான அறிவிப்பை முதன் முதலில் பொறுப்பேற்றுக்கொண்ட அரசு இந்த மகிழ்ச்சிகரமான அறிவிப்பையாவது மக்களுக்குத் தர வேண்டுமென்ற அளவில் அதைச் செய்தது.

இந்த மூன்றுவது அறிவிப்பைப் பார்க்கிற நேரத்தில் இந்தக் கட்டணங்கள் வசூல் செய்யப்பட மாட்டாது என்று நிதியமைச்சர் அவர்கள் அறிவித்துவிட்ட பிறகு இப்போது மீண்டும் 12 ரூபாயிலிருந்து 10 ரூபாயாக, 10 ரூபாயிலிருந்து 8 ரூபாயாகக் குறைக்கிறோம் என்று இரண்டு வகையான பாசனத் தீர்வைகள் பற்றிக் குறிப்பிடுவது, ஏதோ வரியைக் குறைப்பதாக ஆகாது; 10 ரூபாய் புதிதாக, 8 ரூபாய் புதிதாக வரி போடுகிறோம் என்று பொருளே தவிர—இது வேண்டுமென்றால் சட்டமன்ற உறுப்பினர்கள் ஏமாறுகிறவர்களாக இருந்தால் பாகுமொழியால் ஏமாற்றப் பயன்படலாம். விவசாயிகளிடம்—பார்த்தீர்களா, உங்களுக்குப் 10 ரூபாயை 8 ரூபாயாகக் குறைத்து விட்டோம்; 12 ரூபாயைப் 10 ரூபாயாகக் குறைத்து விட்டோம்' என்று இதழ் ஓரத்தில் சர்க்கரை தடவுவது போன்ற நிகழ்ச்சியாக இருக்கலாமே தவிர, குடியரசுத் தலைவர் ஆட்சியில் போடப்பட்ட, வசூலிக்கக்கூடாது என்று தள்ளி வைக்கப்பட்ட நிலுவையை நாங்கள் வசூலிக்கப்போவதில்லை; அறவே நீக்கிவிட்டோம், தீர்மானித்துவிட்டோம் என்று அறிவிக்கப்பட்ட பிறகு 12 ரூபாயைப் 10 ரூபாயாகக் குறைத்திருக்கிறோம், 10 ரூபாயை 8 ரூபாயாகக் குறைத்திருக்கிறோம் என்பது 'குறைத்திருக்கிறோம்' என்ற வாசகத்தின் மூலமாக இனிப்பான சேதியாகத் தெரிவிக்கலாமே தவிர,

உண்மை நிலை அதுவல்ல. விவசாயிகள் 10 ரூபாய் வரி கட்ட வேண்டிய அவசியத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள்; விவசாயிகள் 8 ரூபாய் வரி கட்ட வேண்டிய அவசியத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

இதிலே உள்ள நியாயங்களை நாம் உணர்ந்தாக வேண்டும். இது இன்றைக்கு ஒரு மசோதா மூலமாக நிறைவேற்றப்பட்டு இந்த அவையின் முன்னால் வைக்கப்பட்டு, அதைப்போலவே வணிகப் பயிர் மீதான தனித் தீர்வை 1976-ஆம் ஆண்டு சி. சுப்பிரமணியம் அவர்கள் நிதியமைச்சராக இருந்த நேரத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி நடைபெற்றபோது அதுவும் கொண்டு வரப்பட்டது.

நண்பர் மாரிமுத்து அவர்கள் குறிப்பிட்டதுபோல் திராட்சை, கரும்பு, வாழை, தென்னை, வெற்றிலை, மஞ்சள் இப்படிப்பட்ட பயிர்களுக்கெல்லாம் வரி போடப்பட்டிருக்கிறது. அந்த வரியும் குறைக்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டு, அந்த வரி பற்றிய குறிப்பிலேயே இதை ஒரு மசோதாவாகக் கொண்டு வரவேண்டிய அவசியம் இல்லாமல், நோடிபிகேஷன் வாயிலாக வரிக் குறைப்பைச் செய்யலாம் என்று சொல்லப் பட்டது.

இவை எல்லாம் வரி குறைப்பா? திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இந்த வரிகள் இருந்திருந்து இப்போதுள்ள ஆட்சி குறைக்கிறது என்றால் பொருந்தி எடுத்துக்கொள்ளக்கூடிய ஒன்றாக இருக்கும். இடைக்காலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியில் அறிமுகப்படுத்தப்பட்டு, சிறிது காலம் நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில் ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் அதிலிருந்து 2 ரூபாய், 3 ரூபாய் அளவுக்குக் குறைத்து புதிய வரி போடுகிறோம் என்பதை ஒப்புக்கொண்டாக வேண்டும். இதை நிச்சயமாகக் கைவிட வேண்டுமென்று சுட்டிக்காட்ட ஒரே காரணம்—எந்த சி. சுப்பிரமணியம் இந்த வரியைக் கொண்டு வந்தாரோ அந்தக் கட்சியைச் சேர்ந்த நண்பர் திரு. மாரிமுத்து அவர்களே கைவிட வேண்டுமென்று அறிவித்துவிட்டதால், இன்றைக்கு நாங்கள் புதிதாகச் சொல்லி நீங்கள் கைவிட வேண்டிய அவசியம் இல்லையென்று கருதுகிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** தலைவர் அவர்களே, அப்போது கொண்டு வந்தாலும் அப்போதே அதைக் கைவிட்டுவிட்டோம், விவசாயிகள் சார்பாக அப்போது அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப் பட்டு அது கைவிடப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மு. கருணாநிதி:** திரு. மாரிமுத்து அவர்கள் இன்று எதிர்ப்பதாகச் சொல்லவில்லை, அன்றைக்கே எதிர்த்ததாகச் சொல்லியிருக்கிறார்கள், அது என்னுடைய வாதத்தை இன்னும் வலிவடையச் செய்கிறது. (திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தள்ளிவைக்க) விவசாயிகள் சார்பில் இது எதிர்க்கப் பட்டிருக்கிறது. விவசாயிகளுடைய குரலை திரு. மாரிமுத்து அவர்கள் எதிரொலித்து இருக்கிறார்கள். நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் விவசாயத் துறையிலே அதிக அனுபவம் இல்லாதவர்கள் என்று திரு. மாரிமுத்து அவர்கள் சொன்னார்கள். இனிமேல் எல்லாத் துறைகளிலும் அனுபவம் பெற வேண்டிய இடத்திலே அவர்கள் உட்கார்ந்திருக்கிற காரணத்தால் முதல் அனுபவத்திலேயே இந்த வரியைக் கைவிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1977-ஆம் ஆண்டு, கூடுதல் வரிவிதிப்பு, கூடுதல் தண்ணீர் தீர்வை, சிறப்பு வரிவிதிப்பு, சிறப்புத் தண்ணீர்த் தீர்வை (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 9/77) பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு இங்கே நண்பர்கள் அவர்களது கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள்.

என்னுடைய பேச்சின் ஆரம்பத்தில் ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஏழை விவசாயிகளை வயிற்றில் அடிப்பதற்காக அவர்களைக் கொடுமைப்படுத்துவதற்காக கொடுப்பதுபோல் சொல்லிவிட்டு வேறு ஒரு பக்கம் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்ள இயலாதவனாக நான் இருக்கிறேன் என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்தின்போது போடப்பட்ட வரி என்று சொல்லி அதை இங்கு திரு. மாரிமுத்து